புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# சங்க இலக்கியங்களில் பொருளியல் சிந்தனைகள்

சு.காளீஸ்வரி
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
பதிவு எண் : 21212014022009
ஏ.பி.சி மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தழிழாய்வு மையம், தூத்துக்குடி-628002,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
அங்கீகாரம் பெற்றது. அபிஷேகப்பட்டி,
திருநெல்வேலி-12, தமிழ்நாடு, இந்தியா.

முனைவர் ச. மல்லிகா
நெறியாளர் & இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை & தழிழாய்வு மையம்
ஏ.பி.சி மகாலட்சுமி மகளிர் கல்லூரி,
தூத்துக்குடி-628002

ஆய்வுச் சுருக்கம்:

சங்க இலக்கியங்கள் அக்கால மக்களின் வாழ்வியலை அறிய உதவும் அமுதசுரபி. மக்கள் பொருளைப் பெறுவதை முதன்மையாகக் கருதினர். பொருளியல் என்பது சமூக அறிவியலில் ஒன்று. பொருளின் ஆதாரம் பற்றி அறியக்கூடிய அறிவியல். பொருள் எல்லாக் காலத்திலும் மதிப்புடையது. அவற்றை அறத்தோடு பெற்றலும், ஈட்டலும் வேண்டும் எனச் சங்க இலக்கியங்கள் உரைக்கின்றன. பண்டைத் தமிழர்கள் வணிகத்தில் சிறந்து விளங்கினர். பொருளியலின் மரபுகளையும், பகுப்புகளையும் பின்பற்றி வணிகம் செய்தனர். அம்மக்களிடம் பொருளியல் பற்றிய சிந்தனை மேலோங்கி இருந்தது. சங்ககால மக்களின் பொருளியல் சிந்தனை மரபுகளை ஆராய்வது அக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

ஆய்வு அணுகுமுறை:

தற்கால பொருளியலின் பகுப்புகளைச் சங்க இலக்கியத்துடன் ஒப்பீட்டு நோக்கில் ஆராயப்படுவதால் ஒப்பீட்டு அணுகுமுறையும், சங்கப் பாடல்களைப் பொருளியல் அடிப்படையில் பகுத்தும், தொகுத்தும் ஆய்வு மேற்கொள்ளப்படுவதால் பகுப்பாய்வு அணுகுமுறை, விளக்கமுறை அணுகுமுறை ஆகிய அணுகுமுறைகளும் கையாளப்பட்டுள்ளன.

திறவுச்சொற்கள்:

பொருளியல், வணிகம், சங்க இலக்கியம், உற்பத்தி, மாற்று.

முன்னுரை:

வாழ்க்கையை வளமாகவும், தரமாகவும் வாழ்வதற்கு வழிவகுப்பவை நம் முன்னோர்களின் வாழ்வியல் நெறிகள். அந்நெறிமுறைகளை மக்களிடையே எடுத்துக்காட்டுவன சங்க இலக்கியங்கள். பொருளைப் போற்றும் அகவாழ்வு, புற வாழ்வு இரண்டிலும் தமிழர்கள் தலைசிறந்து விளங்கினர். பெருமைக்குரிய பொருளைச் சேர்ப்பதும், செலவழிப்பதும் சிறப்பாக நடைப்பெற்றால் வாழ்வு செழிப்பாக இருக்கும். சங்க இலக்கியத்தில் பொருளைப் பெறவும் அவற்றைப் பெருக்கவும் மக்கள் பல வழிமுறைகளைக் கையாண்டுள்ளனர். அப்பொருளியலின் பகுப்புமுறைகள் சங்க இலக்கியத்தில் எம்முறையில் எடுத்தாளப்பட்டுள்ளது என்பது ஆராயப்படுகிறது. மேலும் தற்காலப் பொருளியலின் பகுப்புகளான நுகர்வு, உற்பத்தி, மாற்று, பகிர்வு, பொதுநிதி போன்றவைகளை சங்க இலக்கியங்கள் வழி எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

*பொருளியல் - விளக்கம்:*

*பொருளியல் நடைமுறையில் மிகவும் பயனுள்ள அறிவியலாகக் கருதப்படுகிறது. அறிவியல்களுள் மகாராணி போன்றது பொருளியல் என்பர். "பொருளியல் என்ற பதம் கிரேக்க மொழியில் உள்ள 'Oikonomia' என்ற சொல்லிருந்து வருவிக்கப்பட்டுள்ளது. அதன் பொருள் வீட்டு நிர்வாக மேலாண்மை என்பதாகும். பொருளியலின் மூலப்பதம் 'Oikon' மற்றும் 'Nomos' என்பதாகும். இவ்விரண்டு சொற்களின் பொருள் வீட்டுப் பொருளாதாரமாகும். பொருளாதாரம் என்பது மனிதனுடைய நலத்தை முன்னேற்றுவதற்காக வளங்களை மேலாண்மை செய்யக்கூடிய அறிவியலாகும். பொருளாதார இன்னல்களை அறிந்துக் கொள்ளும் அறிவியல் தான் பொருளியலாகும்"1 (செல்வராஜ்,வணிகப்பொருளியல் பக்-1) என்று வணிக நிபுணர் செல்வராஜ் தனது வணிகப்பொருளியல் என்னும் நூலில் விளக்கம் தருகிறார்.*

*பொருளியலின் பகுப்புகள்:*

*பொருளியல் அறிஞர்கள் பொருளியலின் பரப்பெல்லையில் பொருளியலை ஐந்து பகுப்புகளாகப் பிரித்துள்ளனர்.*

*1.நுகர்வு 2.உற்பத்தி 3.மாற்று 4.பகிர்வு 5.பொதுநிதி*

*என ஐந்து வகைப் பகுப்புகள் தற்காலத்தில் காணப்படுக்கின்றன. இவ்வகைகளைச் சங்ககால மக்கள் பொருளின் தேவைகளுக்காகப் பொருளியல் சிந்தனையுடன் பயன்படுத்திப் பெரும் பயன் அடைந்துள்ளனர். அவர்களின் பொருளியல் மேன்பாட்டுச் சிந்தனைகள் இன்றைய பொருளியல் துறைகளுக்கு அடித்தளமாக அமைந்ததனைச் சங்க இலக்கியங்கள் வழி அறிந்துக் கொள்ள முடிகின்றது.*

*நுகர்வு:*

*நுகர்வு என்பது பயனைப் பெறுதல் எனும் பொருளில் அமைகிறது. ஒரு பொருளைப் பெறுவதற்கு மாற்றுப் பொருளைப் கொடுத்து பயன்பெறும் எவரும் நுகர்வோர் என குறிப்பிடப்படுவர்."நுகர்வு என்பது மனித விருப்பங்கள் பூர்த்தி செய்யப்படுவதாகும். விருப்பங்கள் இருப்பது தான் பொருளாதார நடவடிக்கையின் தொடக்கமாகும். மனித நடவடிக்கைகளின் தொடக்கமாகவும் தூண்டுதலாகவும் மனித விருப்பங்கள் செயல்படுகின்றன"2. (செல்வராஜ்,வணிகப்பொருளியல் பக்-4) எனப் பொருளியலில் நுகர்வு முதன்மையாகக் கருதப்படுகிறது.*

*நுகர்வோர் நலன்:*

*நுகர்வோரைப் பொருத்தே வணிகத்தின் வளர்ச்சி அமைகிறது. நுகர்வோரின் நலத்தினையும், பொருளின் தரத்தினையும் கருத்தில் கொண்டே சங்கத்தமிழர்கள் வணிகம் செய்துள்ளனர். நுகர்வோரிடம் நேர்மையுடன், பொருளுக்குரிய தொகையினை மிகுதியாகக் கொள்ளாது, கொடுக்கும் பொருளின் மதிப்பு குறைவு ஏற்படாது தமிழர்கள் வணிகத்தை அறத்தோடு செய்ததனைக்*

*"கொள்வதூம் மிகைகொளாது கொடுப்பதூஉம் குறைகொடாது*
*பல்பண்டம் பகர்ந்து வீசும்*
*தொல்கொண்டித் துவன்று இருக்கை"3(ப.பா 210 - 213)*

*என்கிறது பட்டினப்பாலை. நுகர்வோரே வணிகர்களின் முன்னேற்றத்திற்கு முதன்மையானவர்கள் என்பதை உணர்ந்து நுகர்வோரின் நலனை முதன்மையாகக் கொண்டே சங்ககால வணிகம் நடைப்பெற்றதனைப் பட்டினப்பாலை வழி அறிந்துக் கொள்ளமுடிகிறது.*

*உற்பத்தி:*

*உற்பத்தி என்பது பண்டங்களைத் தயாரிக்கச் செய்யப் பயன்படும் வளங்கள். "உற்பத்தி எனும் சொல் பொருட்களின் பயன்பாட்டையும், மதிப்பையும் உருவாக்கும் செயல்களைக் குறிப்பிடுவதாகும். எந்த செயல் பயன்பாட்டினை உருவாக்கின்றதோ அல்லது அதிகரிக்கப்படுகின்றதோ அச்செயல் உற்பத்தி என்று அழைக்கப்படுகின்றது"4 (செல்வராஜ்,வணிகப்பொருளியல் பக்-4) என உற்பத்திப் பற்றி தெளிவுப்படுத்துகிறார்*

செல்வராஜ். அனைத்து உற்பத்தி நடவடிக்கைகளும் நான்கு உற்பத்திக் காரணிகளால் ஏற்படுகின்றன.

1. நிலம் 2. உழைப்பு 3. மூலதனம் 4. அமைப்பு

நிலம், உழைப்பு இரண்டும் முதன்மைக் காரணிகள். இவ்விரு காரணிகளும் நுகர்விற்காகப் பொருட்களை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படுகின்றன. நுகர்வு போக எஞ்சியது சேமிப்பு. சேமித்தவை முதலீடாகும். இம்முதலீடு உற்பத்திக்கான மூலதனமாகக் கருதப்படுகிறது. அமைப்பு அல்லது நிறுவனம் உற்பத்தியின் சிறப்பு வடிவமாகும். மூலதனம்,அமைப்பு இரண்டாம் நிலைக் காரணிகள். இந்நான்கு காரணிகளும் ஒன்றையொன்று சார்ந்து செயல்படுகின்றன.

நிலம்:

பொருளியலில் நிலம் என்பது இயற்கையின் கொடையாகக் கருதப்படுகிறது. நிலத்தினை உற்பத்திக் காரணியாகப் பயன்படுத்தி வருமானம் பெறமுடிகிறது. சங்ககால மக்களின் வாழ்க்கை குறிஞ்சி,முல்லை,மருதம்,நெய்தல்,பாலை என ஐவகை நிலம் சார்ந்து அமைந்தது. அவர்களின் வாழக்கைக்குத் தேவையானப் பொருட்களைத் தொழில் மூலம் பெற்றுக்கொண்டனர். தேடலில் ஆரம்பித்தது பொருளியல். சங்க மக்களின் முதல் தேடல் உணவாக இருந்தது. அந்தந்த நிலத்தின் வளத்தைப் பொருத்தே அவர்களின் உணவும், தொழிலும், பொருளியல் சமூகமும் அமைந்திருந்தது.

ஐவகை நிலத்தின் தொழில்கள்:

ஐவகை நிலமக்களின் தொழில் அந்நிலம் சார்ந்து அமைந்ததை நாற்கவிராசநம்பி, நம்பியகப்பொருளில் எடுத்துரைக்கின்றார்.

| திணை | நிலம் | தொழில் |
|---|---|---|
| குறிஞ்சி | மலையும் மலைசார்ந்த நிலம் | தேன்அழித்தல்,கிழங்குஅகழ்தல்,<br>தினைப்புனம் காவல் காத்தல் |
| முல்லை | காடும் காடு சார்ந்த நிலம் | வரகு,சாமை விதைத்தல். மூவினம் மேய்த்தல் |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த நிலம் | நெற்பயிரிடல், களைக்கட்டல்,<br>குளம்குடைதல் |
| நெய்தல் | கடலும் கடல் சார்ந்த நிலம் | மீன்ப்பிடித்தல்,உப்புவிளைவித்தல், மீன் உணங்கல் |
| பாலை | மணலும் மணல் சார்ந்த நிலம் | வெஞ்சமம், சூறையாடல் |

ஐவகை நிலமக்கள் தங்கள் நிலச்சூழமைப்புக்கு ஏற்பத் தங்களின் தொழிலை அமைத்துக் கொண்டு உற்பத்தியைப் பெருக்கினர்.

உழைப்பு:

பொருட்களின் உற்பத்தியில் மிகுதியும் பயன்படுத்தப்படுவது மனிதனின் உழைப்பாகும். உழைப்பு என்பது செயல் உற்பத்தி காரணியாகும். பொருளியலில் வருமானத்தையும், வெகுமதியையும் எதிர்பார்த்து செய்யும் அனைத்து வேலைகளும் உழைப்பு எனப்படுகிறது. அவ்வுழைப்பு உடல் உழைப்பாக, அறிவின் உழைப்பாக அமைகிறது. ஐவகை நிலங்களில் வாழ்ந்த சங்கமக்கள் நிலச்சூழலுக்கு ஏற்ப உழைத்து பொருளைச் சேர்நதனர் என்பதை,

"நறுங்காழ் கொன்று கோட்டின் வித்திய

குறுங்கதிர்த் தோரை நெடுங்கால் ஐயவி
ஐவன வெண்ணெலொடு அரில் கொள்பு நீடி
இஞ்சி மஞ்சள் பைங்கறி பிறவும்"5(ம.கா-286-289)

எனும் பாடலடிகளின் வழி அறியமுடிகின்றது. அவர்கள் வாழ்ந்த நிலத்தினை வளமிக்க நிலமாக மாற்றுவதற்கும், பல்வேறு பொருட்களை விளைவிக்கவும் அவர்கள் கடினமான உழைப்பினை மேற்கொண்டதனை உணரமுடிகிறது.

மூலதனம்:

முதல் அல்லது மூலதனம் என்பது தொழிலைத் தொடங்க அல்லது பொருளியல் ஆக்கத்தை உருவாக்கப் பயன்படும் அடிப்படை மூலதனமாகும். மூலதனம் என்பது நிலம், பொருள், இயந்திரம், பணம் முதலியவற்றைக் குறிக்கின்றது. பொருளியல் ஆக்கத்தில் நீண்ட பயன்பாட்டிற்குரிய ஒரு உற்பத்தி காரணியாகக் கருதப்படுகின்றது.

"அளைவிலை உணவின் கிளைஉடன் அருத்தி
நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்,
எருமை, நல்ஆன் கருநாகு பெறூஉம்"6(பெரும் 163-165)

சங்க மகளிர் பொருளீட்டுவதில் நுண்திறனைப் பெற்றிருந்தனர். மூலப்பொருளான தயிரை மோராகவும், நெய்யாகவும் மாற்றி விற்று வருமானம் பெற்றுள்ளனர். விற்றதால் கிடைத்தப் பொருளில் பொன் போன்றவைகளை வாங்காமல் மேலும் வளம் சேர்க்கும் எருமை, பசுவை வாங்கியுள்ளனர். மூலதனம் தான் பொருளியலில் முதன்மையான ஆதாரம் என்பதைச் சங்ககால மகளிர்(மக்கள்) நன்கு அறிந்திருந்தனர்.

அமைப்பு:

பல்வேறு உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, மூலதனம் ஆகியவற்றை ஒருங்கிணைந்து செயல்படுத்தி இலாபம் பெற முற்படுவது அமைப்பு அல்லது நிறுவனம் ஆகும். சங்க காலத்தில் அங்காடிகள் நிறுவன அமைப்புகளாகச் செயல்பட்டன. பொருட்களை வாங்கவும், விற்கவும் முறையான அமைப்பாக அங்காடிகள் இருந்துள்ளன. நாளங்காடி, அல்லங்காடி எனக் காலை,மாலை வேளையில் செயல்படும் அமைப்பினைக் கொண்டுயிருந்தன.

"நாள் அங்காடி நனந்தலைக் கம்பலை"7 (ம.கா - 430)
"அல்அங்காடி அழிதரு கம்பலை"8 (மேலது - 544)

கடைத்தெருவில் நுகர்வோரின் ஆரவாரத்தினை இவ்வடிகள் எடுத்துரைக்கின்றன. சங்ககாலத்தில் நிறுவனம் சிறு அமைப்பாக இருந்தது தெளிவாகிறது.

மாற்று:

மாற்று என்பது ஒரு பொருளுக்கோ அல்லது ஒரு பணிக்கோ மற்றொரு பொருளையோ, பணியையோ பெறுவதாகும். உற்பத்தி செய்யப்பட்டப் பொருட்கள் நுகர்வோருக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டால் தான் நுகர்வு நடைபெறும். மாற்றுப்பணியில் உள்நாட்டு வாணிபம், பன்னாட்டுவாணிபம் இடம்பெறுகின்றன. பண்டைத் தமிழர்களின் பொருளாதாரச் சூழலில் பெரும்பங்கு வகிப்பது பண்டமாற்று முறையாகும். குறிஞ்சி நிலமக்களும், நெய்தல் நிலமக்களும் பண்ட மாற்று வாணிகம் செய்யததைத்

"தேன் நெய்யொடு கிழங்கு மாறியோர்
மீன் நெய்யொடு நறவு மறுகவும்
தீங் கரும்போடு அவல் வகுத்தோர்
மான் குறையொடு மது மறுகவும்"9(பொரு 214-217)

என வரும் பாடலடிகள் தெளிவுப்படுத்துகின்றன.

"நெல்லின் நேரே வெண்க லுப்பெனச்
சேரி விலைமாறு கூறலின்"10(அகம் -140)

எனும் அகநானூறு பாடலடி வழி நெல்லும், உப்பும் நேர் எதிர் மதிப்பு கொண்டதாகக் கருதப்பட்டதை உணரமுடிகிறது.

"நீரினின்றும் நிலத்து ஏற்றவும்
நிலத்தினின்றும் நீர்ப்பரப்பவும்

அளந்தறியாப் பலபண்டம்
வரம்பு அறியாமை வந்து ஈண்டி"11(ப.பா 129-132)

என வரும் பட்டினப்பாலைப் பாடலடிகளால் பன்னாட்டு வாணிகம் சிறப்புற நடைப்பெற்றதை அறியமுடிகிறது.

பகிர்வு:

உற்பத்தி காரணமாக வருமானம் ஈட்டப்படுகிறது. அவ்வருமானம் நான்கு உற்பத்திக் காரணிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படுவது பகிர்வு என்றழைக்கப்படுகின்றது. நுகர்வு இல்லாமல் உற்பத்தி இல்லை. நுகர்வு, பகிர்வு, உற்பத்தி மற்றும் மாற்று ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாகப் பொருளியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

"கொளக்கொளக் குறையாது தரத்தர மிகாது
கழுநீர் கொண்ட எழுநாள் அந்தி
ஆடுதுவன்று விழவின் நாடு ஆர்த்தன்றே
மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்
நாள் அங்காடி நனந்தலைக் கம்பலை"12(ம.கா 426-430)

விழாக்காலங்களில் மக்கள் பொருட்களை விற்கவும், வாங்கவும் நாளங்காடிகள் செயல்பட்டுள்ளன.

மக்கள் - நுகர்வோர் , பொருள் - உற்பத்திச்செய்தவை
மாற்று – நுகர்வோரிடம் மாற்றுப்பொருள் பெறுதல்,
பகிர்வு – நுகர்வோரிடம் பொருள் பகிரப்படுதல்

என உற்பத்தியின் அனைத்து காரணிகளையும் கொண்டு சங்ககால வாணிபம் நடைப்பெற்றுள்ளதனை மதுரைக்காஞ்சி பாடுகின்றது.

பொதுநிதி:

பொதுநிதி என்பது அரசுக்கும், மக்களுக்கும் தொடர்புடைய பொருளியல் "அரசின் வரவு மற்றும் செலவு இரண்டையும் எவ்வாறு சமமாக்குவது என்பதைப் பற்றி பகுப்பாய்வது தான் பொதுநிதி என்று டால்டன் கூறுகிறார். பொதுநிதியில் வரியிடுதல், பொதுக்கடன், பொதுவருவாய்,பொதுச்செலவு மற்றும் நிதிக்கொள்கைகள் அடங்கியுள்ளன. பொதுநிதி இரண்டு பிரிவுகளைக் கொண்டதாகப் பொருளியலாளர்கள் வகுத்துள்ளனர். 1. பொது வருவாய் 2.பொதுச் செலவு"13 (செல்வராஜ்,வணிகப்பொருளியல் பக்-8) எனப் பொதுநிதியின் பிரிவுகளை வணிகப் பொருளியலாளர் செல்வராஜ் கூறியுள்ளார்.

பொது வருவாய்:

பொது வருவாயானது அரசிற்கு நாட்டுவளத்தின் மூலம் கிடைக்கிறது. வருவாய் மக்களிடம் வரிவசூலிப்பதன் மூலமும், சுங்கவரியின் மூலமும் கிடைக்கப்பெறுகின்றன

"தொல்இசைத் தொழில்மாக்கள்
காய்சினத்த கதிர்ச்செல்வன்
தேர்பூண்ட மாஅபோல
வைகல்தொறும் அசைவின்றி
உல்குசெயக் குறைபடாது"14(ப.பா -122-126)

எனப் பட்டினப்பாலைப் பாடலடிகள் சோழநாட்டு துறைமுகத்தில் ஏற்றுமதிக்காகவும், இறக்குமதிக்காகவும் உள்ள பொருட்களுக்குச் சுங்கவரி வசூலிக்கப்பட்டதைத் தெளிவுப்படுத்துகின்றன.

"உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்"15(குறள் - 756)

ஏற்றுமதி, இறக்குமதி வரிகளோடு உள்நாட்டு சுங்கவரிகள் மூலமும் பொதுவருவாயைப் பெருக்கியுள்ளதை வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

*பொதுச்செலவு:*

*அரசாங்க வருவாயில் நாட்டிற்கும், மக்களுக்கும் தேவையான பொதுவான பணியைச் செய்வது பொதுச்செலவு எனப்படுகின்றது.*

*“காடுகொன்று நாடுஆக்கி*
*குளந்தொட்டு வளம் பெருக்கிப்*
*பிறங்குநிலை மாடத்து உறந்தை போக்கிக்*
*கோயிலொடு குடிநிறீஇ”16(ப.பா-283-286)*

*நாட்டின் வளத்தைப் பெருக்குவதற்காக அரசு செலவு செய்ததை இப்பாடலடிகள் விளக்குகின்றன.*

*முடிவுரை:*

*மனித வாழ்க்கையில் பொருளின் தேவை இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. பொருள் மனித முயற்சியில் உண்டாக்கப்படுகின்றது. பொருளினை ஆராயும் அறிவியல் பொருளியல் எனப்படுகிறது. தற்காலத்தில் பொருளியலின் பகுப்புகளை ஐந்தாக பொருளியல் நிபுணர்கள் பிரித்துள்ளனர். இப்பகுப்புகள் சங்க இலக்கியங்களில் பொதித்து உள்ளன. இன்றைய பொருளியல் வளர்ச்சிக்குச் சங்க இலக்கியங்கள் அடித்தளமாக அமைந்துள்ளன. நிலச்சூழலின் அடிப்படையில் அமைந்த தொழிலினைச் செய்து உற்பத்தியைப் பெருக்கியுள்ளனர். மூலதனத்தின் முக்கியத்துவத்தை அறிந்து தொழில் புரிந்துள்ளனர். அங்காடிகளை நிறுவனங்களாகப் பயன்படுத்தித் தங்களின் பொருளியல் தேவைகளைப் பூர்த்திச் செய்துள்ளனர். அரசர்கள் மக்களிடம் நியாமான வரிவசூல் செய்தும் அதனை நாடு மற்றும் மக்களின் நலத்திற்காகச் செலவு செய்துள்ளதையும் இலக்கியங்கள் வழி அறியப்படுகிறது.*

*துணைநூற்பட்டியல்:*

*1.வணிகப்பொருளியல், செல்வராஜ்,முதற்பதிப்பு - 2013 பவானிப்ளிக்கேஷன், சக்கம்மாள்புரம், விளாத்திகுளம்.*

*2.சங்கஇலக்கியம் மூலமும்உரையும் தொகுதி – 11 பத்துப்பாட்டு, ச.வே.சுப்பபிரமணியன்(உ.ஆ), முதற்பதிப்பு - 2022, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை - 17*

*3.நாற்கவிராச நம்பியின் நம்பியகப்பொருள் மூலமும் உரையும், இராமசுப்பிரமணியன்(உ.ஆ) முல்லை நிலையம், 9,தி நகர், சென்னை – 17*

*4. சங்க இலக்கியம் மூலமும் உரையும் தொகுதி – 8 அகநானூறு மணிமிடை பவளம், மீனவன்(உ.ஆ), முதற்பதிப்பு - 2022, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை – 17*

*5.திருக்குறள் எளியஉரை, விஜயலட்சுமி.தி.வே.(உ.ஆ), முதற்பதிப்பு – 2016,மணிவாசகர் பதிப்பகம், சென்னை – 1*

********* ********* ********** ********* ********* ********** ********** **********